# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# க.பொ.த (உ/த) முன்னோடிப் பரீட்சை - 2017

| தரம் : 13 | இந்து சமயம் | நேரம் : |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ............................................... | 2.00 மணி |

*** 01 முதல் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 5 பெயர்கள் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களில் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு விடைத்தாளில் குறிப்பிடுக.**

01) 1) ஸ்மிருதி 2) சங்கிதை 3) பிராமணம் 4) ஆரணியம் 5) உபநிடதம் ( )

02) 1) சிற்பம் 2) இலக்கியம் 3) இசை 4)ஓவியம் 5) நடனம் ( )

03) 1) காரணம் 2) காமிகம் 3) நரசிங்கம் 4) அஜிதம் 5) சுப்பிரபேதம் ( )

04) 1) கண்ணகிவழிபாடு 2) முனியப்பர் வழிபாடு 3) ஐயனார் வழிபாடு 4) முருக வழிபாடு 5) மதுரைவீரன் வழிபாடு ( )

05) 1) ஆயுர்வேதம் 2) இருக்கு வேதம் 3) தனுர்வேதம் 4) அருத்தவேதம் 5) காந்தர்வவேதம் ( )

*** 06 முதல் 10 வரையள்ள வினாக்கள் ஒவ்வான்றிலும் 05 சோடிப்பெயர்கள் தரப்பட்டடுள்ளன. அவற்றுள் அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடிச் சொல்லை இனங்கண்டு அவ்விலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

06) 1) சிவாகமங்கள் - காமிகம் 2) சாக்தம் - தந்திரம்
3) வைணவம் - வைகாசனம் 4) காணாபத்தியம் - பஞ்சாரத்திரம்
5) கௌமாரம் - குமாரதந்திரம் ( )

07) 1) இராஜசிம்மன் - ஷேதகாரி 2) மகேந்திரவர்மன் - வியத்தகுதிறத்தோன்
3) 3ம் சிம்மவர்மன் - ஐயடி கள்காடவர்கோன் 4) பரமேஸ்வரவர்மன் - வித்தியாவிந்தன்
5) நரசிம்மவர்மன் - மாமல்லன் ( )

08) 1) தேவாரம் - சம்பந்தர்
2) திருவாசகம் - மாணிக்கவாசகர்
3) நம்பியாண்டார் நம்பி - திருத்தொண்டர் திருவந்தாதி
4) சேரமான் பெருமான் - திருக்கைலாய ஞான உலா
5) பட்டினத்தார் - பொண்வண்ண அந்தாதி ( )

09) 1) பிரகிருதி - சாங்கியம் 2) அவித்தை - வேதாந்தம்
3) ஆணவம் - சைவசித்தாந்தம் 4) திவ்வியதேசம் - வைணவம்
5) தர்மபூத ஞானம் - பௌத்தம் ( )

10) 1) மாமங்கம் - முருகன் கோயில் 2) பருத்தித்துறை - பசுபதீஸ்வரக் கோயில்
3) யாழ்பல்கலைக்கழகம் - பரமேஸ்வரன் கோயில் 4) நல்லூர் - கைலாச நாதர் கோயில்
5) கீரிமலை - நகுலேஸ்வரர் கோயில் ( )

* **11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களில் "அ" "ஆ" என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. "அ" நிரலுக்கு ஏற்ற விதத்தில் "ஆ" நிரல் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

*11)*

| அ | ஆ |
|---|---|
| 1) இலிங்கம் | A - இராஜேந்திர சோழன் |
| 2) இலிங்கோற்பவர் | B - சோழர் ஆட்சியில் கட்டப்பட்டது. |
| 3) தேவிகோயில் | C - இரண்டாம் நந்திவர்மன் |
| 4) விநாயகர் | D - வைத்திலிங்கச் செட்டியார் |
| 5) சண்டேசுரர் | E - இராச சிம்ம பல்லவன் |

*1)* ABCED *2)* ABDECE *3)* CABDE *4)* CADEB *5)* DEABC *( )*

*12)*

| அ | ஆ |
|---|---|
| 1) கோதை | A - பெரியாழ்வார் |
| 2) நம்மாழ்வார் | B - கோவிந்தசாமி |
| 3) விஷ்ணுசித்தர் | C - சடகோபர் |
| 4) சித்தினைக்குட்டி | D - ஆண்டாள் |
| 5) நம்பியாரூரர் | E - சுந்தரர் |

*1)* DCABE *2)* BCDEA *3)* ACBED *4)* EDCBA *5)* CDEBA *( )*

*13)*

| அ | ஆ |
|---|---|
| 1) கர்ணக்கூறு | A - கோயிலின் வாசலில் கட்டப்படுவது. |
| 2) வேதிகை | B - உபவீசத்தின் மேல் கட்டப்படுவது. |
| 3) யோதிகை | C - கோபுரத்தில் இடம்பெறும் உறுப்பு |
| 4) அதிஷ்டாணம் | D - ஸ்தம்பத்தைத் தாங்கும் உறுப்பு |
| 5) கோபுரம் | E - தூணை அழகுபடுத்தும் உறுப்புக்களில் ஒன்று |

*1)* ABCDE *2)* BCEDA *3)* CEBDA *4)* DBECA *5)* ECBDA *( )*

*14)*

| அ | ஆ |
|---|---|
| 1) படைத்தல் | A - மௌனோற்சவம் |
| 2)காத்தல் | B - தீர்த்தம் |
| 3) அழித்தல் | C - தேர்த்திருவிழா |
| 4) அருளல் | D - வீதிவலம் வருதல் |
| 5) மறைத்தல் | E - கொடியேற்றம் |

*1)* ABCDE *2)* CBADE *3)* CDEAB *4)* DCEBA *5)* EDCBA *( )*

*15)*

| அ | ஆ |
|---|---|
| 1) இந்திய மருத்துவத்தின் தந்தை | A - தன் வந்திரி |
| 2)இந்திய அறுவைச் சிகிச்சையின் தந்தை | B - சபாபதி |
| 3) செகராச சேகரமாலை | C - சுஸ்ருதர் |
| 4) சந்தான தீபிகை | D - இராமலிங்க முனிவர் |
| 5) சந்தான மணி | E - சோமசன்மா |

*1)* ACEBD *2)* ACEDB *3)* AECDB *4)* BDCAE *5)* CDBEA *( )*

*** 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கு அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16) "கரகம்" என்பதற்கு வழங்கப்படும் இன்னுமொரு பெயர்
1) அடுக்கு 2) பூம்பந்தல் 3) காவடி 4) கொம்பு முறி 5) அனுமார் வந்தன்

17) சைவ சித்தாந்த நூல்களுள் காலத்தால் முற்பட்டதாக கருதப்படும் நூல்
1) சிவஞானபேதம் 2) சிவஞானசித்தியார் 3) திருக்களிறுற்றுப்படியார்
4) திருவுந்தியார் 5) சிவப்பிரகாசம்.

18) விஷ்ணுவின் அவதாரமுத்திகளுள் ஆவேச முத்தியாக அமையும் வடிவம்.
1) இராமர் 2) கண்ணன் 3) பரசுராமன் 4) திருமங்கையாழ்வார்
5) திருவிக்கிரமன்

19) சங்கரரது வேதாந்தத்திற்கு முன்னோடியாக விளங்கியவர்
1) பாதராயனர் 2) பிரபாகர் 3) சபர் 4) கெடையாதர்
5) பாஸ்கரர்

20) இந்திய மருத்துவ வளர்ச்சியில் அறுவைச் சிகிச்சையின் தந்தையாக கரதப்படுபவர்.
1) சரகர் 2) சுஸ்ருதர் 3) ஆத்திரேயர் 4) தன்வந்திரி
5) அக்கினிவேசர்

21) 19ம் நூற்றாண்டில் சைவ சமய வளர்ச்சியின் பொருட்டு வெளிவந்த முதற் பத்திரிகை
1) சைவ உதயபானு 2) இலங்கைநேசன் 3) இந்துசாதனம் 4) சைவபேதம்
5) விஞ்ஞானவர்த்தினி

22) ஆணவத்தின் குணங்கள் மூன்று அடங்கும் தொகுதி
1) இராகம், நகை, அநர் 2) மோகம், மதம், கற்பம்
3) கற்பம், விசித்திரம், குரோதம் 4) நியதி, மதம், யோகம்
5) விசித்திரம், கொலை, குரோதம்

23) இந்துக்களின் சமய நம்பிக்கைக்கும் வாழ்க்கை முறைக்கும் நாளாந்த ஒழுங்குகளுக்கும் வழிகாட்டியாக அமைவது.
1) பத்திரிகை 2) கைரேகைசாத்திரம் 3) பங்சாங்கம் 4) நாட்காட்டி
5) கிளி சோதிடம்

24) "ஓம் நாராயணய நமஸ்கிருதய" என ஒவ்வொரு அத்தியாயமும் ஆரம்பிக்கும் நூல்
1) இராமாயணம் 2) மகாபாரதம் 3) விஷ்ணுபுராணம் 4) சிவரகசியம்
5) ஐதரேயபிராமணம்.

25) மகரசங்கிராந்தி எனப்படும் பண்டிகை
1) தீபாவளி 2) ஆடிப்பிறப்பு 3) தைப்பொங்கல் 4) வருடப்பிறப்பு
5) கார்த்திகை விளக்கீடு

*** 26 தொடக்கம் 30 வரையள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழே ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன உரிய தலைப்புடன் பொருந்தாததை தெரிவு செய்க.**

26) **இரண்டாம் சிவாலயம் - பொலன்னறுவை**
1) பொலன்னறுவையில் சோழர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட சிவாலயங்களுள் மிகச்சிறப்பு வாய்ந்த ஆலயம் இரண்டாம் சிவாலயம் ஆகும்.
2) இவ்வாலயம் வானவன் மாதேவீஸ்வரம் என்றும் அழைக்கப்படும்

3) இவ்வாலயம் அதிட்டானம் முதல்விமானம் வரையுள்ள ஆலயத்துக்குரிய முழு வடிவம் கொண்டது.
4) இதன் வளாகத்தில் பிள்ளையார் கோயில் தனி ஆலமரமாகக் காணப்படுகின்றது.
5) வானவன் மாதேவீஸ்வரத்தின் அமைப்பும் அழகும் தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தின் அழகிற்கும் அமைப்புக்கும் ஒப்பானது.

27) **உமாபதி சிவாச்சாரியார்**

1) இவர் சிவஞானபோதம் எனும் நூலுக்குச் சிவப்பிரகாசம் என்னும் வழி நூலை எழுதியவர்.
2) தில்லைச் சிவனின் திருவருளால் பெற்றான் சாம்பானுக்கு முத்தி கொடுத்தவர்.
3)"சித்தாந்த அட்டகத்தில் அடங்கும் நூல்களை எழுதி சைவ சித்தாந்த உருவாக்கத்திற்கும் பணிபுரிந்தவர்.
4) தில்லைக்கொற்றவன் குடியில் பிறந்தவர் தமிழ் வடமொழியில் வல்லவர்.
5) இவர் திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம் முதலான நூல்களையும் எழுதியுள்ளார்.

28) **உபநிடதமும் இந்து தத்துவங்களும்**

1) பிரபஞ்ச உண்மையை விளக்குபவை உபநிடதங்கள்
2) ஆன்மாவினதும் இறைவனதும் இருப்பு பற்றி உபநிடதங்கள் எடுத்துக் கூறுகின்றது.
3) இந்து தத்துவங்கள் உபநிடத மகாவாக்கியங்களுக்கான விளக்கங்களாகும்.
4) சமணபௌத்த தத்துவங்கள் உபநிடத சிந்தனைகளின் மேல் கட்டியெழுப்பப்பட்டவை.
5) இந்துக்களின் வாழ்வியல் சிந்தனைகளை எடுத்துக் கூறும் நூல் உபநிடதங்களாகும்.

29) **திருஞான சம்பநதரும் சமயப் பணிகளும்.**

1) சமய குரவர்களில் ஒருவரான திருஞான சம்பந்தர் இளவயதிலேயே பல பணிகளைப் புரிந்தவர்.
2) இவருடன் சம காலத்தில் சமயப் பணி புரிந்தவர் சுந்தர மூர்த்தி நாயனார் எனலாம்.
3) இவர் சற்புத்திர மார்க்கத்தில் நின்று முத்தியடைந்தவர்.
4) தலயாத்திரை மூலம் பக்தியை வளர்த்தவர்.
5) திருநீறு பஞ்சாட்சர மந்திரத்தின் பெருமையை உலகறியச் செய்தவர்.

30) **பசுபதிச் செட்டியார்**

1) சைவ பரிபாலன சபையின் பொருளாளர் ஆவார்
2) இந்து வாலிப சமாசத்தை உருவாக்கியவர்
3) திருக்கேதீச்சர ஆலய திருப்பணியில் ஈடுபட்டவர்.
4) சைவ வித்தியா விருத்திச் சங்க நிறுவுனர் ஆவார்
5) யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர்களில் ஒருவராவர்..

* **மேல் வரும் பகுதியில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையது அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 31-35 வரையுள்ள ஒவ்வொ வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| A பிரதிபாஷிகம் | B சித்தாந்த சிவாமணி | C மானசாரம் | D கற்றளி | E பரம் |
| F குருஞானசம்பந்தர் | G சிறுதளி | H விவர்த்தவாதம் | I வியூகம் | J ஆகமம் |

31) இந்து விக்கிரகக் கலையுடன் தொடர்புடைய விடயங்கள் அடங்கும் தொகுதி
1) AG 2) CF 3) CG 4) DF 5) DG

32) திராவிடக் கட்டடக்கலை அமைப்பை வெளிப்படுத்தி நிற்கும் செதுக்கல் எழுத்துக்கள்
1) DG 2) DF 3) GI 4) GB 5) DJ

33) வேதாந்தக் கோட்பாட்டைக் குறிக்கும் எழுத்துக்கள்.
1) AG 2) HC 3) AD 4) HG 5) AH

34) நாயக்கர் கால கலை ஆதீனங்களுடன் தொடர்புடைய தொகுதி
1) FA 2) BC 3) BF 4) BD 5) FJ

35) வைணவ நெறியுடன் தொடர்புடைய தொகுதி
1) EF 2) IJ 3) IG 4) EB 5) EI

*** சைவ சமயத்தின் வளர்ச்சியில் பின்னணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அடிப்படையாகக்கொண்டு 36-40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சேர்மானத்தை தெரிவு செய்க.**

**தத்துவ உருவாக்கத்தில் நாலாயிரத்திவ்விய பிரபந்தம்.**

வைதீக மதங்களிளொன்று வைணவம். அது தமிழ்நாட்டில் தனித்தன்மையுடன் விளங்குகின்றது. அதனது பரத்துவம் பற்றிய சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - வைணவத்தின் முழுமுதற் கடவுளாகிய விஷ்ணு தமிழ் நாட்டில் திருமால் என்னும் பெயரில் போற்றப்படுகின்றார்.

B - திருமால் தன்மேல் ஆழ்ந்த பக்தி கொண்டோருக்கு அருள்பாலிப்பார். திருமாலிடம் பக்தியுடையோர் ஆழ்வார் எனப்படுவர்.

C- ஆழ்வார்கள் திருமாலின் அனுக்கிரகத்தால் அவனது இருப்பையும் அற்புதங்களையும் வெளிப்படுத்தினர்.

D- அவ்வகையில் ஆழ்வார்களின் பாசுரங்கள் தெய்வீகத்தன்மையைப் பெற்றவை என்னும் உண்மை நிறுவப்பட்டது.

E - இப் பாசுரங்கள் நாலாயிரத்திவ்விய பிரபந்தம் என்னும் பெயரில் நாத முனிவரால் தொகுக்கப்படன.

F - இராமானுஜர் வேதாந்தத்திலே புதிய பரிணாமங்களை ஏற்படுத்தவும் விசிட்டாதவைதம். என்னும் கோட்பாட்டை உருவாக்குவதற்கும் வித்திட்டது இத்திவ்விய பிரபந்தமேயாகும்.

36) விஷ்ணுவின் பெருமையை விளக்கும் சேர்மானம்
1) AB 2) AC 3) CD 4) DE 5) EF

37) ஆழ்வார்களின் பாசுரங்களின் ஆற்றலைப் புலப்படுத்தும் பொருத்தமான சேர்மானம்
1 AC 2) BC 3) BE 4) CD 5) DF

38) ஆழ்வார்களின் பாசுரங்கள் வைணவ சமயத்திலும் கோட்பாட்டிலும் பெறும் முக்கியத்துவத்தை விளக்கும் சேர்மானம்
1) AE 2) BC 3) CD 4) DF 5) EF

தஞ்சைப்பெருங்கோயில்

A - சோழர்கால கட்டடக் கலை உன்னத படைப்பாக அமைவது தஞ்சைப் பெருங்கோயில் ஆகும்.

B - இக்கோயில் 500 அடி நீளமும் 250 அடி அகலமும் கொண்டது.

C - தென்திசை மேரு பெரிய கோயில் பெருவுடையார் கோயில் என்பன இதன் சிறப்பு பெயர்களாகும்.

D - இக் கோயில் கருவறை அர்த்தமண்டபம் மகா மண்டபம் முதலியன ஆறு பகுதிகளைக் கொண்டது.

E - சோழர்களின் பல்துறை சார்ந்த வெற்றியின் குறியீடாக அமைவதே இக் கோயிலாகும்

F - இக் கோயிலின் விமானம் 216 அடி உயரத்தைக் கொண்டது.

39) சோழர் காலக் கட்டளையின் சிறப்புக்கும் சாதனைக்கும் சான்றாக அமையும் சேர்மானம்
1) ABD 2) ACE 3) BCD 4) EDF 5) CDE

40) தஞ்சைப் பெருங்கோயிலின் அமைப்புக்களைக் குறிக்கும் சேர்மானம்’
1) ADE 2) AEF 3) CDE 4) BDF 5) DEF

**41-50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் 5 விடயங்கள் தரப்பட்டுள்ளன. மிகபபொருத்தமான விடையினை தெரிவு செய்க.**

*41)* அத்வைத வேதாந்தத்தின் பிதாமகர்

1) அஜாத வாதத்தைத் தோற்றுவித்தவர் கௌடபாதர் என்பவர்.
2) அவர் காரண காரியத்தொடர்பு பொருளற்றது என்பர்.
3) கௌடபாதர் ஆன்மா ஒன்றே உண்மைப் பொருள் என்பர்.
4) அஜாத வாதத்தின் மேலே கட்டியெழுப்பப்பட்டதே சங்கரரின் வேதாந்தமாகும்.
5) உலகம் இருப்பதுமில்லை உருவாக்கப்படுவதுமில்லை அது பொய் என்பர்.

*42)* புராணம் ஒரு கலைக்களஞ்சியம்

1) புராணம் என்பது பழைமை அல்லது பூரணத்துவம் எனப் பொருள்படும்.
2) புராணங்கள் பஞ்ச இலக்கணங்களைக் கொண்டவை
3) மகா புராணங்கள் ஐந்து வகைப்படும். சிவன், விஷ்ணு, அக்கினி, சூரியன், பிரமா முதலியவை தெய்வங்களின் மருத்துவம் பற்றிப் பேசும்.
4) புராணங்கள் இந்து தத்துவங்களின் பொருள் மரபினை விளக்குவன.
5) தல புராணங்கள், கலைகள் பிரபந்தங்கள் முதலான யாவற்றுக்கும் கலைப் பொக்கிஷமாக விளங்குவது புராணங்களாகும்.

*43)* அவத்தையும் ஆணவமும்

1) வேதாந்தம் சீவாத்துமாவின் இன்ப துன்பங்களுக்கு அடிப்படைக் காரணம் அவத்தையே எனக் குறிப்பிடுகின்றது.
2) சைவ சித்தாந்தம் ஆன்மாவின் வினைப் பயன்களுக்கு அடிப்படையாக அமைவது ஆணவமே என்கிறது.
3) வேதாந்திகள் சீவாத்துமாக்களின் ஆன்ம விடுதலைக்குத் தடையாக இருப்பது அவத்தையே என்பர்.
4) சித்தாந்தத்தின் ஆணவம் ஆன்மாவோடு அத்துவிதப்பட்டிருப்பது ஆன்மாவின் விடுதலைக்குத் தடை என்பர்.
5) வேதாந்த சித்தாந்த கொள்கைகளின் அடிப்படையில் அவத்தையும் ஆணவமும் பெரிதும் ஒத்திருக்கும்.

*44)* காவடியும் பக்தியும்

1) இறைவனை வழிபடுவதற்குரிய வழிபாட்டு முறைகளுள் காவடியும் ஒன்றாகும்.
2) காவடி முருகனுக்குப் பிடித்த ஆடற் கலைகளுள் ஒன்று என்பர்.
3) ஆன்மீக நாட்டத்தையும் பக்தி வைராக்கியத்தையும் விளக்கும் சாதனங்களுள் காவடியும் ஒன்றாகும்.
4) காவடி வன்பக்தியையும், மென்பக்தியையும் வெளிப்படுத்துவது.
5) பால் காவடி மென் பக்திக்கும், பறவைக் காவடி வன்பக்திக்கும் எடுத்துக்காட்டும்.

*45)* திருமுறையின் தெய்வத்தன்மையும் ஓதலும்.

1) திருமுறைகள் தெய்வத்தன்மை பொருந்தியவை.
2) இறைவன் உவந்தேற்கும் பாக்களுள் தேவாரமும் திருமுறைகளும் முதன்மையானவை.
3) வேத ஆகமங்களைக் காட்டிலும் இறைவனுக்கு உகந்த பாக்கள் தேவார திருவாசகமே என்பர் நாவலர்.
4) திருமுறைகள் தெய்வத் தன்மை மிக்கதால் அதன் திருவருட் திறத்தால் பல அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டன.
5) தெய்வத் தன்மை கொண்ட திருமுறைகள் ஆலய சந்நிதிகளிலும் அவற்றின் கிரியைகளின் போதும் ஓதப்பட வேண்டியவையாகும்.

*46)* போகிப் பண்டிகை

1) பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற மொழிக்கேற்ப கொண்டாடப்படுகின்றது.
2) சூரியன் தனு இராசியிலிருந்து மகரராசிக்குச் செல்லும் நாளாகும்.
3) சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நாளாக கொள்ளப்படுகின்றது.
4) மாடுகளை அலங்கரித்து விருந்தளித்து வழிபடும் நாளாகும்.
5) உழவர் திருநாள் என்றும் அழைக்கப்படும்.

47) தட்சணாமூர்த்தி சுட்டும் தத்துவம்.

1) சிவாலயங்களில் தென்திசை நோக்கி வீற்றிருப்பவர்.
2) இறைவன் குருவாக எழுந்தருளிய வடிவமாகிய இது சிவமூர்த்தங்களுள் ஒன்றாக விளங்குகின்றது.
3) வியாக்கியான தட்சணாமூர்த்தி சிவாலயங்களில் அதிகமாகக் காணப்படும்.
4) பசுவானது பாசத்திலிருந்து நீங்கிப் பதியை அடைவதைச் சுட்டுகிறது.
5) யோகா தட்சணாமூர்த்தி, ஞான தட்சணாமூர்த்தி, வியாக்கியான தட்சணாமூர்த்தி, வீணாதர தட்சணாமூர்த்தி என நான்கு வகைப்படும்.

48) கண்ணகி வழிபாடு

1) இவ் வழிபாட்டின் தோற்றமும் முதன்மையும் மணிமேகலையுடன் ஆரம்பமாகிறது.
2) சேரன் செங்குட்டுவன் கி.பி 5ம் நூற்றாண்டில் கண்ணகி விழா எடுத்தான்.
3) ஊர் காவல் பண்ணுதல் மடைவைத்தல் என்பன இறுதி நாள் சடங்காக நடைபெறும்.
4) நோய் நீக்கம், மழைவளம், பய நீக்கம் முதலியவற்றுக்காக கண்ணகியை வழிபடுவர்.
5) கண்ணகி வழிபாட்டில் கதவு திறந்த பின்னர் ஏடு படித்தல் இடம்பெறுவதில்லை.

49) புலக்காட்சி

1) புலக்காட்சி மூலம் பெறப்படும் அறிவு ஊடக அறிவாகும்
2) புலக்காட்சியின் அறிவுப் படி நிலையில் கேதுவும் ஒன்றாகும்.
3) குறித்த பொருளை அதன் விசேட குணாம்சங்களுடன் அறிவு சவிகல்ப புலக்காட்சி ஆகம்.
4) புலக்கட்சியினை ஆகம அளவை என்றும் அழைப்பர்
5) மந்திரம் ,தந்திரம், உபதேசம் ஆகிய மூன்று வகைகளில் புலக்காட்சி அமையும்.

50) ஆச்சிரமதர்மங்கள்

1) வானப்பிரஸ்தநிலை என்பது சந்நியாசன நிலைக்கான பயிற்சிக்காலமாகும்.
2) பிதுர்யக்ஞம் என்பது உருவ வடிவான கடவுளுக்கு ஆற்றும் வழிபாடாகும்.
3) குருகுலக் கல்வியின் பிரதான நோக்கம் மாணவனுக்கு உலகியற் பேறுகளை வழங்குதலாகும்.
4) ஐவகை வேள்விகளும் சந்நியாச நிலையில் உள்ளவர்களால் ஆற்றப்பட வேண்டியவையாகும்.
5) இந்து ஒருவனின் வாழ்வில் மூன்றாம் படி நிலை கிருஹஸ்தம் ஆகும்.

The National e-learning Portal

மாகாணக் கல்வித்திணைக்களம்
வடக்கு மாகாணம்.
க.பொ.த (உ/த) முன்னோடிப்பரீட்சை - 2017

| தரம் : 13 | இந்து சமயம் | நேரம் : 3.00 மணி |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ............................................... | |

## பகுதி - II

**பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

### பகுதி - I

*01) இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் உபநிடதங்கள் பெறும் முக்கியத்துவத்தை பின்வரும் தலைப்புக்களில் விபரிக்க.*

*1) உபநிடத அமைப்பும் சிறப்பு வாய்ந்த உபநிடதங்களின் பெயர்கள் ஐந்தும் எழுதுக.*
*2) உபநிடதம் ஆராயும் பிரமம்.*
*3) உபநிடதம் கூறும் சன்ம மறுபிறப்புக் கருத்துக்கள்*

(6+7+7=20 புள்ளிகள்)

*02) இந்து சமய நெறிகளில் ஒன்றாகிய காணாபத்தியத்தின் சிறப்பம்சங்களை பின்வரும் தலைப்பக்களில் எழுதுக.*

*1) காணாபத்திய நெறியின் தோற்றமும் வளர்ச்சியும்*
*2) விநாயகர் திருவுருவும் தத்துவக் கருத்துக்களும்.*
*3) கணபதிக்குரிய வழிபாட்டு முறைகள்*

(7+7+6=20 புள்ளிகள்)

*03) வேதாந்த தத்துவ வளர்ச்சியில் மற்றுமொரு பரிமாணமே விசிட்டாத்வைதமாகும். இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புக்களில் எழுதுக.*

*1) விசிட்டாத்துவைதம் பற்றிய விளக்கம்*
*2) தத்துவத்திரயம் பற்றிய முக்கிய அம்சங்கள்*
*3) பிரபக்தியும் ஆன்ம விடுதலையும்*

(7+7+6=20 புள்ளிகள்)

### பகுதி - II

*04) சைவசித்தாந்த ஆன்மாக் கோட்பாட்டின் பிரதான அம்சங்களை மேல்வரும் தலைப்புக்களின் அடிப்படையில் ஆராய்க.*

*1) ஆன்மா பற்றிச் சைவ சித்தாந்தம் தரும் விளக்கம்*
*2) ஆன்மாவும் மும் மலங்களும்*
*3) முத்திப் பேறு*

(7+7+6=20 புள்ளிகள்)

*05) நாட்டார் கலைகளில் காவடி பெறும் முக்கியத்துவம் பற்றி எழுதுக.*

(7+7+6=20 புள்ளிகள்)

*06) மேல்வருவனவற்றை அடிப்படையாகக்கொண்டு சுந்தர மூர்த்தி நாயனார் பற்றி விபரிக்குக.*

*1) சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்ந்த காலச் சூழ்நிலை*
*2) அவரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்*
*3) இறை நிலைப்பட்ட அற்புதங்களும் பணிகளும்*

(7+7+6=20 புள்ளிகள்)

07) இந்து தத்துவங்களுக்கு முன்னோடியாக அமையும் தத்துவம் சாங்கிய தத்துவமேயாகும்.

1) சாங்கியத்தின் காலத்தையும் அதன் பிரதான நூல்களையும் குறிப்பிடுக.
2) சாங்கியம் ஏற்றுக்கொள்ளும் பிரமாணங்கள் எவை?
3) சாங்கியத்தத்துவக் கோட்பாடுகளைச் சுருக்கமாக குறிப்பிடுக?

(4+6+8=20 புள்ளிகள்)

08) மேல் வருவனவற்றுள் எவையேனும் நான்கினுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) நல்வழி
2) சைவ சமயமும் ஊக்கமும்
3) ஆச்சிரமக் கோட்பாடு
4) கண்ணகி வழிபாடு
5) சிவராத்திரி
6) திருமூலர்

(4x5=20 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education